# கம்லா பாசின்



கம்லா பாசின் (24 ஏப்ரல் 1946 - 25 செப்டம்பர் 2021) இந்தியாவின் பெண்கள் இயக்கத்தின் ஒரு சின்னமாக திகழ்ந்தார். அவரின் உணர்வு, உறுதியான ஓங்கி ஒலிக்கும் குரல் (புலாந் அவாஸ்), வாசகங்கள், கவிதைகள், எழுத்துக்கள் மற்றும் உரைகள் என்பன சாதாரண மக்கள் மற்றும் கல்வியாளர்கள் போன்ற அனைத்து தரப்பினராலும் புரிந்து கொள்ளக் கூடியனவாக அமைந்திருந்ததுடன் அவரை ஒரு பெண்ணிலைவாத தலைவியாக வேறுபடுத்திக் காண்பித்தது.

ஏப்ரல் 1998 இல் சங்கத் என அறியப்படும் ஒரு தெற்காசிய பெண்கள் வலையமைப்பின் இணை உருவாக்குனராகவும் கம்லா உள்ளார். மேலும், இந்தியாவின் பெண் உரிமைகள் தொடர்பில் செயற்படும் ஒரு அரச சார்பற்ற நிறுவனமான ஜகோரியின் இணை உருவாக்குனராகவும் கமலா உள்ளார். அவர் புத்தகங்கள், கைநூல்கள், பாடல்கள் மற்றும் கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார், அவற்றில் பல கிட்டத்தட்ட 30 மொழிகளில் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் 1 பில்லியன் மக்களை திரட்டும் இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாகக் காணப்படும் அவர் 2005 இல் 'சமாதானத்துக்கான நோபல் பரிசுக்காக 1000 பெண்கள்' என்ற முன்னெடுப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராக இருந்தார்.

தனிப்பட்ட இழப்பு மற்றும் துயரம் என்பன வாழ்வின் ஆழமான பொருளை ஆன்மீகத்தில் தேடுவதற்கு அவரை ஊக்குவித்தன. அவர் திச் நாத் ஹான் மற்றும் பௌத்த கோட்பாட்டினை பின்பற்றுபவராக மாறினார், இருந்த போதும் அனைத்து மத போதனைகளையும் ஏற்பவராகவும் இருந்தார்.



# கம்லா பாசின் விருது

## தெற்காசியாவில் பால்நிலை சமத்துவத்தை முன்கொண்டு செல்லல்

ஒவ்வொரு வருடமும் பின்வரும் விடயங்களில் தெற்காசியாவைச் சேர்ந்த இருவருக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது.

- தெற்காசியாவில் பாரம்பரியம் அற்ற வாழ்வாதாரங்களில் ஈடுபடும் பெண்களை கௌரவிப்பதற்கான ஒரு விருது.
- பால்நிலை சமத்துவத்தை நோக்கி பணிபுரியும் ஆண்களுக்கு அங்கீகாரமளிக்கும் விருது

இரண்டு விருதுப் பிரிவுகளிலும் சிஸ் மற்றும் ட்ரான்ஸ் அத்துடன் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர் .

விருது பின்வரும் விடயங்களைக் கொண்டதது:
கேடயம் ஒன்றுடன் இந்திய ரூபாய்கல் 100,000 பரிசுத் தொகை

தெற்காசியாவில் பணிபுரியும் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் கொடை வழங்குனர்களுடன் இணைந்து கற்கவும், இணையவும் அத்துடன் வலையமைப்பாக்கத்தை மேற்கொள்ளவும் விருது பெறுபவர்களுக்கு சிறந்த வாய்ப்பு உள்ளது.

## யாரால் விண்ணப்பிக்க முடியும்?

ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம், பாக்கிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய தெற்காசிய நாடுகளின் குடிமக்களிடம் இருந்து அத்துடன் அங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் மக்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்.

இந்த 8 நாடுகளினதும் உத்தியோகபூர்வ மொழிகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்ப்படும்.

## விருதுப் பிரிவுகள்

1. பாரம்பரியமற்ற வாழ்வாதாரத்தை (NTL) கடைப்பிடிக்கும் ஒரு பெண் (சிஸ்/ட்ரான்ஸ்)
2. பையன்கள்/ஆண்களுடன் பணி புரிவதன் மூலம் பால்நிலை நீதி மிக்க சூழலை இயலுமாக்குவது தொடர்பில் பணி புரியும் ஒரு ஆண் (சிஸ்/ட்ரான்ஸ்)

# தெரிவு அள்வுகோல்கள்



### பிரிவு 1

- தனது/அவர்களின் சூழமைவில் பாரம்பரியம் அல்லாத வாழ்வாதாரத்தை குறைந்தது கடந்த 3 வருடங்களாக கடைப்பிடித்தல்
- வெறுமனே தனது/அவர்களின் உழைப்புகளின் மீதான கட்டுப்பாடு மாத்திரமன்றி தனது/அவர்களின் வாழ்வின் மீதான கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும் வகையில் வலுப்படுத்தப்பட்டிருத்தல்.
- அவர்/அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகக் காணப்படுவதுடன் ஏனையோருக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தியிருத்தல்.

பாரம்பரியம் அற்ற வாழ்வாதாரங்கள் என்பன குறிப்பிட்ட சாதி, சமூகம், மதக்குழு, அல்லது அவர்களின் பாலியல் நாட்டம், அவர்களின் பால்நிலை அடையாளம், மாற்றுத்திறன், அவர்களின் வாழிடம் மற்றும் இது போன்ற பல விடயங்களை கொண்ட நீண்டதாக இருக்க முடியுமான பட்டியலில் உள்ள விடயங்கள காரணமாக பெண்களைச் சூழக் காணப்படும் கண்ணாடிக் கூண்டை அல்லது கொங்கிரீட் கூரை மற்றும் சுவர்களை தகர்க்கக் கூடிய வாழ்வாதாரங்களாக அமைகின்றன, அத்துடன் இவை எந்த ஒரு சமூகத்திலும் காணப்படும் பாகுபாட்டை ஏற்படுத்தும் கட்டமைப்புகள் காரணமாக வேறுபடுகின்றன. ஊதியமற்ற பணிகளைச் சூழக் காணப்படும் பால்நிலை நெறிமுறைகள் பெண்கள் வாகனம் செலுத்துதல் அல்லது மேசன் வேலை போன்றவற்றை பெறுவதைத் தடுக்கும் காரணங்களில் ஒன்றாக அமைகின்றது, இவ்வாறான பணிகளை பெண்கள் மேற்கொள்ளும் வேளை அவர்கள் பகலின் பெரும்பகுதியில் மற்றும் இரவிலும் வீட்டில் இருந்து வெளியே இருக்க நேரிடுகின்றது. பாரம்பரியமற்ற வாழ்வாதாரங்கள் அத்துடன் இப்பிராந்தியத்தில் அவை தொடர்பில் காணப்படும் சில உதாரணங்களை இங்கே கிளிக் செய்வதன் மூலம் நோக்கம்லாம்.

### பிரிவு 2

- பால்நிலை நீதி மிக்க ஒரு உலகை நோக்கி கடந்த 5 வருடங்களில் ஆண்கள்/பையன்களுடன் பணி புரிந்து வரல்
- பராமரிப்பு பணிகளில் பங்களித்தல், பெண்களின் தலைமைத்துவத்தை ஏற்றல், அனைத்து வகைகளிலும் அமைந்த பால்நிலை அடிப்படையில் அமைந்த வன்முறை மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட சமூக கலாச்சார நெறிமுறைகளுக்கு எதிராக போரிடல் மூலமாக தனது தனிப்பட்ட வாழ்வு மற்றும் பணி வாழ்வில் தீங்கான ஆண்மைத்துவங்களை எதிர்த்தல்.
- அவர் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகவராகக் காணப்படுவதுடன் பால்நிலை நீதி மிக்க ஒரு உலகை சாத்தியமாக்க ஏனைய ஆண்கள் இடையே செல்வாக்கு செலுத்தத்தக்க ஒரு நபராகக் காணப்படல்.

பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிப்பதில் பையன்கள் மற்றும் ஆண்களை ஈடுபாடு கொள்ள வைப்பது ஒரு வளர்ந்து வரும் இயக்கமாக மாறியுள்ளது. “தரம் மிக்க ஆண்கள் சமத்துவத்துக்கு அஞ்சுவதில்லை” வாசகம் ஆணாதிக்க நெறிமுறைகளை

\



சவாலுக்கு உட்படுத்துவதில் ஆண்களின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகின்றது. தமது வாழ்வில் ஆணாதிக்க நடைமுறைகளை சோதனை செய்தவர்கள் தமது சலுகைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அத்துடன் ஆணாதிக்கம் ஏற்படுத்தும் தடைகளை உற்சாகமாக ஏற்றுக் கொள்ளும் ஆண்களை நாம் இப்பிரிவில் தேடுகின்றோம். தீங்கான நடைமுறைகளுக்கு எதிராக போரிடுவதில் ஏனைய ஆண்களுடன் உற்சாகமாக இணைந்து செயற்படும் ஆண்கள், பெண்கள் மற்றும் பாலியல் சிறுபான்மைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்பவர்கள், வீட்டின் பராமரிப்பு பணிகளில் பொறுப்புகளை பகிர்பவர்கள் அத்துடன் பெண்கள் மற்றும் ட்ரான்ஸ்ஜெண்டர் தனிநபர்கள் தமது உரிமைகளை பெறுவதற்கு ஆதரவளிப்பவர்களை நாம் தேடுகின்றோம். மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த முகவர்கள் ஒருவரிடம் ஒருவர் கற்றுக்கொள்ளவும் பால்நிலை சமத்துவத்துக்காக ஆதரித்து வாதிட ஏனையோருக்கு ஊக்கமளிக்கவும் ஆதரவுச் சூழலை உருவாக்குவது எமது நோக்கமாகும்.

## கால எல்லைகள்

**மார்ச் 8, 2025:** விண்ணப்ப செயல்முறை திறத்தல்

**ஜூன் 30, 2025:** விண்ணப்ப செயல்முறை முடிவு

**ஜூலை-செப்டம்பர் 2025:** வேட்பாளர்களின் குறுகிய பட்டியல் மற்றும் நேர்காணல்

**அக்டோபர் 2025:** வெற்றியாளர்களின் அறிவிப்பு

**நவம்பர் 27, 2025:** நேபாளத்தின் லலித்பூரில் உள்ள TEWA இல் விருது வழங்கும் விழா



## தேர்வு செய்வோர்

### பங்களாதேஸ்



**குஷி கபிர்** ஒரு சமூக செயற்பாட்டாளர், பெண்ணிலைவாதி மற்றும் சூழல்வாதி ஆவார். தற்போது அவர் நிஜேரா கோரி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆவார். பல்வேறுபட்ட தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மன்றங்களில் அவர் கௌரவ பதவிகளையும் வகித்து வருகின்றார், கொள்கை உரையாடல் நிலையத்தின் உறுப்பினர் மற்றும் நம்பிக்கை நிருவாகி; சங்கத் அமைப்பின் பிராந்திய அறிவுரையாளர்; அத்துடன் ஒரு பில்லியன் மக்களை திரட்டும் உலகளாவிய முன்னெடுப்பின் பங்களாதேஸ் நாட்டுக்கான ஒருங்கிணைப்பாளர் என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன.

### நேபாளம்



**பிந்தா பாண்டே** ஒரு நேபாள அரசியல் செயற்பாட்டாளர் ஆவார். நேபாளத்தின் முதலாவது அரசியலமைப்பு சபையின் (2008-2012) ஒரு உறுப்பினராக இருந்த இவர் தற்போது பெடரல் பாராளுமன்றத்தில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினராக உள்ளார். 2004-09 காலப்பகுதியில் இவர் நேபாள தொழிற் சங்கங்களின் பொதுச் சம்மேளணத்தின் பிரதி பொதுச் செயலாளராக கடமையாற்றியுள்ளார். தசாப்தத்துக்கான ILO ஆளுகைச் சபையில் (2011-2021) இவர் ஆசிய பசிபிக் தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்திருந்தார். “நேபாள தொழிற்சங்க இயக்கங்களில் பெண்களின் பங்கேற்பு” மற்றும் “நேபாள அரசியலில் பெண்கள்” ஆகிய புத்தகங்களை இவர் எழுதியுள்ளார்.

### இந்தியா



**அனு அகா** ஒரு பயிற்றப்பட்ட சமூகப் பணியாளர் ஆவார். தேர்மெக்ஸ் சபை அனுவை அதன் நிறைவேற்று தவிசாளராக நியமித்தது. ஓய்வு பெற்றதன் பின்னர் பொருளாதார ரீதியாக பின் தங்கிய சிறுவர்களின் ஆரம்பக் கல்விக்காக தனது நேரத்தை அர்ப்பணித்தார். அகான்ஷா அமைப்பின் சபையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பங்கேற்றிருந்த அவர் டீர் ஃபோர் (TFI) இந்தியா (TFI) முன்னெடுப்பை ஆரம்பிக்க உதவினார். TFI முன்னெடுப்பின் தவிசாளராக இருந்து ஓய்வு பெற்ற அவர் இன்னும் அதன் சபை உறுப்பினராக செயற்படுகின்றார். இந்திய தொழிறுதுறை கூட்டமைப்பில் (CII) உற்சாகமாக அவர் செயற்பட்டு வருகின்றார். 6 வருடங்கள் அவர் ராஜ்ய சபா உறுப்பினராக சேவை புரிந்துள்ளார்.

**நமிதா பண்டாரி** ஒரு விருது பெற்ற ஊடகவியலாளர் என்பதுடன் சன்டே, இந்தியா டுடே, அத்துடன் டெய்லி ஹிந்துஸ்தான டைம் போன்ற பல்வேறுபட்ட ஊடகங்களுக்கு 30 வருட அறிக்கையிடலை மேற்கொண்ட அனுபவம் கொண்டவர் ஆவார். 2013 இல் மின்ட் செய்திப்பத்திரிகையின் முதலாவது பால்நிலை ஆசிரியராக நியமிக்கப்பட்ட இவர் 2016 வரை அப்பதவியில் தொடர்ந்தார். பெண்கள் மற்றும் பணிகள் தொடர்பில் அவர் ஒரு கட்டுரைத் தொகுதியையும் எழுதியுள்ளார்.





## பாகிஸ்தான்



**முனிஸே ஜஹாங்கீர்** Voicepek.net என்ற மனித உரிமை விவகாரங்களில் கவனம் செலுத்தும் பாகிஸ்தானின் முதலாவது டிஜிட்டல் ஊடக இயங்குதளத்தின் பிரதம ஆசிரியர் ஆவார். விருது பெற்ற தொலைக்காட்சி ஊடகவியலாளரான அவர் ஒரு ஆவணப்பட உருவாக்குனர் ஆவார், தற்போது அவர் Aaj TV தொலைக்காட்சியின் சமகால விவகாரங்களில் கவனம் செலுத்தும் 'ஸ்பொட்லைட்' என அறியப்படும் நிகழ்ச்சியை நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஆவார். பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தெரிவு செய்யப்பட்ட பேரவை உறுப்பினரான இவர் மனித உரிமைகளுக்கான தெற்காசியர்கள் (SAHR) அமைப்பின் தேர்வு செய்யப்பட்ட ஒரு சபை உறுப்பினரும் ஆவார். ஊடகங்களில் தெற்காசிய பெண்கள் (SAWM) எனும் அமைப்பின் ஸ்தாபகர் ஆவார். WEF அமைப்பினால் 2008 ஆம் ஆண்டு உலகின் இளம் தலைவர் என கௌரவிக்கப்பட்டார்.

## இலங்கை



**ராதிகா குமாரசுவாமி** ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆவார். ஒரு இராஜதந்திரியான இவர் மனித உரிமைகளை ஆதரித்து வாதிடும் செயற்பாட்டாளர் என்பதுடன் ஐக்கிய நாடுகள் சபையில் அதன் செயலாளர் நாயகத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு முதல் 2012 இல் ஓய்வு பெறும் வரை ஆயுத முரண்பாடு மற்றும் சிறுவர்கள் என்ற விடயதானத்தில் பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதியாக கடமையாற்றியுள்ளார். 1994 தொடக்கம் 2003 வரை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளராக கடமை புரிந்துள்ளார். 2017 இல் இவர் மியன்மாருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை கண்டறியும் தூதுக்குழுவுக்கு நியமிக்கப்பட்டார் அத்துடன் மத்தியஸ்தம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு அறிவுரை வழங்கும் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஜூன் 2022 இல் அவர் எத்தியோப்பியாவுக்கான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.



# விருது வழங்கலில் ஈடுபடும் நிறுவனங்கள்

Azad Foundation

ஒரு பெண்ணிலவாத நிறுவனமான அஸாத் நிதியம் சமூக மற்றும் மதப் பிரிவினைகள் மத்தியில் பணியாற்றி வருகின்றது. வளங்கள் இல்லாத பெண்களை வாழும் திறன் கொண்ட பாரம்பரியம் இல்லாத வாழ்வாதாரங்களில் ஈடுபாடுகளை மேற்கொள்ளச் செய்வதன் மூலம் அவர்களை வலுப்படுத்தியும் வருகின்றது.

அஸாத் அமைப்பின் பணிகளை மேலும் அறிந்து கொள்ள பின்வரும் இணையத்தளத்தை தயவு செய்து நோக்கவும்: **www.azadfoundation.com**

## iPartner India, UK

iPartner India, ஐக்கிய இராச்சியத்தில் அமையப்பெற்றுள்ள ஒரு கொடை நிறுவனமாகும். அதிக பால்நிலை நீதி மற்றும் விகிதப் பங்கு மிக்க இந்தியாவை - வறுமை மட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்த, தனது பால்நிலை, சாதி, அல்லது சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருப்பினும் ஒவ்வொரு நபருக்கும் சம வாய்ப்பை வழங்கும் ஒரு இந்தியாவை உருவாக்குவது இவ்வமைப்பின் தொலை நோக்காகும். எமக்கு 16 வருட அனுபவம் உள்ளதுடன் களத்தில் நெருக்கமாகவும் தாழ் மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்வை நிலைமாற்ற செயற்படும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பங்காண்மையுடனும் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

iPartner India, UK அமைப்பின் பணிகள் பற்றி அறிந்து கொள்ள பின்வரும் இணையத்தளத்தை தயவு செய்து நோக்கவும்-

**ஓரங்கட்டப்பட்ட குரல்கள் செவிமடுக்கப்படுவதை iPartner India அமைப்பு சாத்தியமாக்கி வருகின்றது.**

## இந்தியாவுக்கான தேசிய நிதியம்

இந்தியாவுக்கான தேசிய நிதியம் (NFI) குடியியல் ஈடுபாடு, எதிர்வினை மிக்க கொள்கை உருவாக்கம் மற்றும் சமூக பொறுப்புக்கூறல் என்பவற்றின் ஊடாக சமூக நீதியை ஏற்படுத்தும் கடப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றது. சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் NFI 14 மாநிலங்களில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அடிமட்டத்தில் உள்ள 500 சிவில் சமூக நிறுவனங்களுடன். இந்நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட அடிப்படைகளான காலநிலை மாற்றம், பால்நிலை நீதி, குடியியல் தளம் மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை மேம்படுத்தல் என்பவற்றில் தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் சிறுபான்மை சமூகங்களுடன் பணியாற்றி வருகின்றது.

இந்தியாவுக்கான தேசிய நிதியத்தின் பணிகள் பற்றி அறிந்து கொள்ள பின்வரும்

இணையத்தளத்தை தயவு செய்து நோக்கவும்: **https://www.nfi.org.in/**

Azad Foundation | PARTNER INDIA | nfi National Foundation for India | Hosting Partner: ChaiTewa